3. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

118. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரி தொடர்பான விதிகளை இயற்றுவது குறித்து, வணிகவரிகள்-அறநிலையத் துறையின் 22—11—1983 ஆம் நாளிட்ட 1354 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. [தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரி தொடர்பான சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 22/1983) 7 (3) ஆம் பிரிவின்கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

119. வணிகவரிகள்-அறநிலையத்துறையால் வெளியிடப்பட்ட 18—8—1977 ஆம் நாளிட்ட II (1)/CTR/ 185 ஆம் எண் அறிவிக்கையை நீக்கி விடுதல் தொடர்பாக வணிகவரிகள்-அறநிலையத்துறையின் 26—4—1982 ஆம் நாளிட்ட 437 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின்கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

120. 4—3—1979 முதல் 23—3—1979 ஆம் நாள் வரை வாங்கப்பட்ட தேங்காய்களுக்காக வணிகர்களால் செலுத்தப்பட வேண்டிய வரியைத் தள்ளுபடி செய்தல் தொடர்பாக, வணிகவரிகள்-அறநிலையத்துறையின் 17—12—1983 ஆம் நாளிட்ட 1433 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின்கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

121. கோவை, குன்னூர் ஆகிய இடங்களில் ஏலச்சந்தைகளில் விற்பனை செய்யப்பட்ட தேயிலையின் மீதான வரி விதிப்பு விதத்தைக் குறைப்பது தொடர்பாக வணிகவரிகள்-அறநிலையத்துறையின் 14—12—1983 ஆம் நாளிட்ட 1416 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின்கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

122. 1980 ஆம் ஆண்டுக்கான சோழன் சாலை போக்குவரத்துக் கழகத்தின் ஒன்பதாம் ஆண்டு அறிக்கை. [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 1/1956) 619-A ஆம் பிரிவின்கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

123. 1981 ஆம் ஆண்டுக்கான சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகத்தின் பத்தாம் ஆண்டு அறிக்கை. [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 1/1956) 619-A ஆம் பிரிவின்கீழ் அவை முன் வைக்கப் படுகிறது].

ஆ. அறிவிப்புகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

இல்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS